KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

KURIKULUM STANDARD SEKOLAH MENENGAH

# Bahasa Tamil

## Dokumen Standard Kurikulum dan Pentaksiran

## Tingkatan 4 dan 5

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

KURIKULUM STANDARD SEKOLAH MENENGAH

# Bahasa Tamil

## தமிழ் மொழி

Dokumen Standard Kurikulum dan Pentaksiran

# Tingkatan 4 dan 5

## படிவம் 4 & 5


**Bahagian Pembangunan Kurikulum**

**SEPTEMBER 2018**

Terbitan 2018

© Kementerian Pendidikan Malaysia

Hak Cipta Terpelihara. Tidak dibenarkan mengeluar ulang mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa juga bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanik, rakaman atau cara lain sebelum mendapat kebenaran bertulis daripada Pengarah, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia, Aras 4-8, Blok E9, Parcel E, Kompleks Pentadbiran Kerajaan Persekutuan, 62604 Putrajaya.

**உள்ளடக்கம்**


ருக்குன் நெகாரா ........................................ v

தேசியக் கல்வித் தத்துவம் ........................................ vii

தேசியக் கலைத்திட்ட வரையறை ........................................ ix

அணிந்துரை ........................................ xi

முன்னுரை ........................................ 1

குறியிலக்கு ........................................ 2

நோக்கம் ........................................ 2

கே.எஸ்.எஸ்.எம். கலைத்திட்ட அமைப்பு ........................................ 4

கலைத்திட்டக் குவிவு ........................................ 6

21ஆம் நூற்றாண்டிற்கான திறனும் பண்பும் ........................................ 6

உயர்நிலைச் சிந்தனைத்திறன் ........................................ 8

விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல் அணுகுமுறை ........................................ 9

விரவி வரும் கூறுகள் ........................................ 12

வகுப்பறை மதிப்பீடு ........................................ 15

உள்ளடக்க அமைப்பு ........................................ 18

படிவம் நான்கிற்கான உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும் தர அடைவும்

    கேட்டல், பேச்சு ........................................ 23

    வாசிப்பு ........................................ 25

    எழுத்து ........................................ 27

    செய்யுளும் மொழியணியும் ........................................ 29

    இலக்கணம் ........................................ 30

நான்காம் படிவத்திற்கான செய்யுளும் மொழியணியும் ........................................ 32
நான்காம் படிவத்திற்கான இலக்கணம் ........................................ 34
படிவம் ஐந்திற்கான உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும் தர அடைவும்
    கேட்டல், பேச்சு ........................................ 37
    வாசிப்பு ........................................ 39
    எழுத்து ........................................ 41
    செய்யுளும் மொழியணியும் ........................................ 43
    இலக்கணம் ........................................ 44
ஐந்தாம் படிவத்திற்கான செய்யுளும் மொழியணியும் ........................................ 46
ஐந்தாம் படிவத்திற்கான இலக்கணம் ........................................ 48
பங்களித்தவர்கள் பெயர்ப்பட்டியல் ........................................ 49

# RUKUN NEGARA

BAHAWASANYA Negara kita Malaysia mendukung cita-cita hendak:
Mencapai perpaduan yang lebih erat dalam kalangan seluruh masyarakatnya;
Memelihara satu cara hidup demokratik;
Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;
Menjamin satu cara yang liberal terhadap tradisi-tradisi
kebudayaannya yang kaya dan berbagai corak;
Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia, berikrar akan menumpukan seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut berdasarkan atas prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

# ருக்குன் நெகாரா

உறுதியாக, நம் மலேசிய நாடானது பின்வருவனவற்றை அடைய இலட்சியமாகக் கொண்டுள்ளது:
அனைத்துச் சமூகங்களுக்கிடையில் அணுக்கமான ஒற்றுமையை ஏற்படுத்துதல்;
ஒரே ஜனநாயக வாழ்க்கை முறையைப் பேணுதல்;
நாட்டின் சுபிட்சத்தை நியாயமாகவும் நடுநிலையாகவும் பகிர்ந்து கொள்ளும்
சமுதாயத்தை உருவாக்குதல்;
பல்லின மக்களின் பல்வித பாரம்பரியமும் பண்பாடும் சுதந்திரமாகப்
பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்;
அறிவியலையும் நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் முற்போக்கான
சமுதாயத்தை உருவாக்குதல்;

ஆகையால், மலேசிய மக்களாகிய நாங்கள், மேற்கூறிய இலட்சியங்களை அடைய பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் எங்களின் முழுச் சக்தியையும் முயற்சியையும் ஒருங்கிணைத்துச் செயல்படுவோம் என உறுதிப் பிரமாணம் செய்கிறோம்:

**இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்**
**பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்**
**அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்**
**சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்**
**நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்**

# FALSAFAH PENDIDIKAN KEBANGSAAN

"Pendidikan di Malaysia adalah suatu usaha berterusan ke arah lebih memperkembangkan potensi individu secara menyeluruh dan bersepadu untuk melahirkan insan yang seimbang dan harmonis dari segi intelek, rohani, emosi dan jasmani, berdasarkan kepercayaan dan kepatuhan kepada Tuhan. Usaha ini adalah bertujuan untuk melahirkan warganegara Malaysia yang berilmu pengetahuan, berketerampilan, berakhlak mulia, bertanggungjawab dan berkeupayaan mencapai kesejahteraan diri serta memberikan sumbangan terhadap keharmonian dan kemakmuran keluarga, masyarakat dan negara"

Sumber: Akta Pendidikan 1996 (Akta 550)

# தேசியக் கல்வித் தத்துவம்

“மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்”

மூலம்: கல்விச் சட்டம் 1996 (சட்டம் 550)

# DEFINISI KURIKULUM KEBANGSAAN

**3. Kurikulum Kebangsaan**

(1) Kurikulum Kebangsaan ialah suatu program pendidikan yang termasuk kurikulum dan kegiatan kokurikulum yang merangkumi semua pengetahuan, kemahiran, norma, nilai, unsur kebudayaan dan kepercayaan untuk membantu perkembangan seseorang murid dengan sepenuhnya dari segi jasmani, rohani, mental dan emosi serta untuk menanam dan mempertingkatkan nilai moral yang diingini dan untuk menyampaikan pengetahuan.

Sumber: Peraturan-Peraturan Pendidikan (Kurikulum Kebangsaan) 1997
[PU(A)531/97.]

# தேசியக் கலைத்திட்ட வரையறை

3. **தேசியக் கலைத்திட்டம்**

(1) தேசியக் கலைத்திட்டம் என்பது அறிவு, திறன், நெறிமுறை, பண்பு, கலாச்சாரக் கூறுகள், நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய கலைத்திட்ட மற்றும் புறப்பாட நடவடிக்கைக்கான ஒரு கல்வித்திட்டமாகும். இத்திட்டம் மாணவர்கள் உடல், ஆன்மிகம், அறிவு, உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமையாகப் பெற்றிருக்க வகை செய்வதோடு மாணவர்களுக்கு வேண்டிய பண்புகளை விதைத்து அவற்றை மேம்படுத்தவும் அவர்கள் அறிவைப் பெறவும் வழிவகுக்கிறது.

மூலம்: கல்வி விதிமுறைகள் (தேசியக் கலைத்திட்டம்) 1997
[PU(A)531/97.]

**KATA PENGANTAR**

Kurikulum Standard Sekolah Menengah (KSSM) yang dilaksanakan secara berperingkat mulai tahun 2017 akan menggantikan Kurikulum Bersepadu Sekolah Menengah (KBSM) yang mula dilaksanakan pada tahun 1989. KSSM digubal bagi memenuhi keperluan dasar baharu di bawah Pelan Pembangunan Pendidikan Malaysia (PPPM) 2013-2025 agar kualiti kurikulum yang dilaksanakan di sekolah menengah setanding dengan standard antarabangsa. Kurikulum berasaskan standard yang menjadi amalan antarabangsa telah dijelmakan dalam KSSM menerusi penggubalan Dokumen Standard Kurikulum dan Pentaksiran (DSKP) untuk semua mata pelajaran yang mengandungi Standard Kandungan, Standard Pembelajaran dan Standard Prestasi.

Usaha memasukkan standard pentaksiran di dalam dokumen kurikulum telah mengubah lanskap sejarah sejak Kurikulum Kebangsaan dilaksanakan di bawah Sistem Pendidikan Kebangsaan. Menerusinya murid dapat ditaksir secara berterusan untuk mengenal pasti tahap penguasaannya dalam sesuatu mata pelajaran, serta membolehkan guru membuat tindakan susulan bagi mempertingkatkan pencapaian murid.

DSKP yang dihasilkan telah menyepadukan enam tunjang Kerangka KSSM, mengintegrasikan pengetahuan, kemahiran dan nilai, serta memasukkan secara eksplisit Kemahiran Abad Ke-21 dan Kemahiran Berfikir Aras Tinggi (KBAT). Penyepaduan tersebut dilakukan untuk melahirkan insan seimbang dan harmonis dari segi intelek, rohani, emosi dan jasmani sebagaimana tuntutan Falsafah Pendidikan Kebangsaan.

Bagi menjayakan pelaksanaan KSSM, pengajaran dan pembelajaran guru perlu memberi penekanan kepada KBAT dengan memberi fokus kepada pendekatan Pembelajaran Berasaskan Inkuiri dan Pembelajaran Berasaskan Projek, supaya murid dapat menguasai kemahiran yang diperlukan dalam abad ke-21.

Kementerian Pendidikan Malaysia merakamkan setinggi-tinggi penghargaan dan ucapan terima kasih kepada semua pihak yang terlibat dalam penggubalan KSSM. Semoga pelaksanaan KSSM akan mencapai hasrat dan matlamat Sistem Pendidikan Kebangsaan.

**Dr. MOHAMED BIN ABU BAKAR**
Timbalan Pengarah
Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

**முன்னுரை**

மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்திற்கேற்பவும் (PPPM 2013-2025) தொடக்கப்பள்ளிக்கான கே.எஸ்.எஸ்.ஆர். கலைத்திட்டத்தின் தொடர்ச்சியாகவும் இடைநிலைப்பள்ளிக்கான கே.எஸ்.எஸ்.எம். கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களின் கற்றலையும் அடைவுநிலையையும் அடிப்படையாகக் கொண்ட இத்திட்டம் அனைத்துலக ரீதியில் அவர்கள் போட்டியிடும் தன்மையைப் பெறும் வகையில் அறிவு, சிந்தனைத் திறன், தலைமைத்துவத் திறன், இருமொழி ஆற்றல், பண்பும் ஆன்மிகமும், தேசிய அடையாளம் ஆகிய ஆறு அம்சங்களை வலியுறுத்துகின்றது. மாணவர்கள் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளவும் குடும்பம், சமுதாயம், நாடு ஆகியவற்றுக்குச் சிறந்ததொரு பங்களிக்கவும் இந்த ஆறு அம்சங்கள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இதன் காரணமாக, இடைநிலைப்பள்ளிக்கான கலைத்திட்டம் மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இக்கலைத்திட்டம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் வளர்க்கும் கூறுகளைக் கவனத்தில் கொண்டுள்ளது. இதன்வழி, மாணவர் பிறரைப் பற்றித் தெரிந்து கொள்வதோடு பிறருக்கு மதிப்பளிக்கவும் தனிமனித வேற்றுமையை ஏற்றுக்கொள்ளவும் வகை செய்கிறது.

இக்கலைத்திட்டத்தின்வழி இனம், மதம், சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் பேதம் இல்லாமல் நாட்டின்மீது பற்றும் மலேசியக் குடிமகன் என்ற பெருமையும் கொண்ட மாணவர்கள் உருவாக்கப்படுவர். மேலும், இக்கலைத்திட்டம் மாணவர்களிடையே நாட்டுப்பற்றை வளர்ப்பதோடு பன்முகத்தன்மையைப் புரிந்து கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் உய்த்துணரவும் வழிவகுக்கின்றது.

**தமிழ்மொழிக் கலைத்திட்டம்**

நம் நாட்டின் கல்விக் கொள்கைக்கேற்ப இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழி ஒரு கூடுதல் மொழிப்பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இதற்குரிய கலைத்திட்டம் தொடக்கப்பள்ளித் தமிழ்க் கலைத்திட்டத்தின் வளர்ச்சியாக விரிவடைகிறது. தொடக்கப்பள்ளியில் பெற்ற தமிழ்மொழியாற்றலை மேலும் வளப்படுத்துவதோடு தேசியக் கல்வித் தத்துவத்திற்கிணங்க மாணவர்களின் அறிவாற்றல், ஆன்மிகம், உடல், உள்ளம் ஆகிய கூறுகளிலும் சமன்நிலை வளர்ச்சி அடைவதை இக்கலைத்திட்டம் வலியுறுத்துகிறது.

தமிழ் வழங்கும் நாடுகளுக்கிடையே சமூகம், பண்பாடு, வணிகம் சார்ந்த தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் நட்புறவை வளர்த்துக்கொள்ளவும் தமிழ்மொழியைப் பயன்படுத்திக்கொள்வதற்கு இக்கலைத்திட்டம் வழிகாண்கிறது. இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழியைப் பயிலும் மாணவர்கள் பொது நோக்கமும் பரந்த அறிவும் பெற்றவர்களாகத் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. நூலறிவு, நன்னெறியுணர்வு, சிந்தனைத்திறன், தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன் ஆகிய கூறுகளும் வலியுறுத்தப்படுகின்றன.

இந்த ஆவணம், இடைநிலைப்பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டிய தமிழ்மொழிக்கான முழுமையான தர மற்றும் மதிப்பீட்டு ஆவணமாகும். மாணவர்கள் அடைய வேண்டிய குறியிலக்கு, நோக்கம், கலைத்திட்டக் குவிவு, உள்ளடக்கத் தரம், கற்றல் தரம், தர அடைவு ஆகியவற்றோடு வரையறுக்கப்பட்ட இலக்கணமும் செய்யுளும் மொழியணியும் இதில் இடம்பெற்றுள்ளன.

**குறியிலக்கு**

இடைநிலைப்பள்ளிக்கான தமிழ்மொழிக் கலைத்திட்டம் சமுதாயத் தொடர்பினை மேம்படுத்தவும் தகவல்களைப் பெற்று முறையாகக் கையாளவும் பல்வகைப் பனுவல்களை வாசித்து உய்த்துணரவும் தேவைப்படும் நல்ல தமிழறிவைப் பெறுவதைக் குறியிலக்காகக் கொண்டுள்ளது. மேலும், எண்ணங்களையும் கருத்துகளையும் ஏரணச்சிந்தனையோடு விளைபயன்மிக்க வகையில் வெளிப்படுத்தவும் தமிழ்மொழியினைப் போற்றிப் பேணவும் இது வழிவகுக்கிறது.

**நோக்கம்**

தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல்வழி, இடைநிலைப்பள்ளி இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:

1. செவிமடுத்தவற்றைப் புரிந்து கொண்டு அவற்றிலுள்ள கருத்துகளைச் சீர்தூக்கிப் பார்த்தல்; பகுத்தாய்தல்; நல்ல மொழியைப் பயன்படுத்திக் கருத்துகளைப் பண்புடன் வெளிப்படுத்துதல்.
2. பிறருடன் விளைபயன்மிக்க வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்தல்; ஆய்வு, ஆக்கச் சிந்தனையோடு ஏடல்களையும் கருத்துகளையும் திறம்படப் பேசுதல்.

3. அறிவையும் கருத்தையும் பெறுவதற்குப் பல்வேறு மூலங்களை வாசித்துக் கருத்துணர்தல்.
4. வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தித் தகவல்களைத் திரட்டுதல்; வகைப்படுத்துதல்; மதிப்பிடுதல்; முடிவுக்கு வருதல்.
5. பல்வகை எழுத்துப் படிவங்களை நல்ல படைப்பாற்றலுடனும் விளைபயனுள்ள வகையிலும் படைத்தல்.
6. செய்யுளையும் மொழியணியையும் அறிந்து உய்த்துணர்தல்; பயன்படுத்துதல்.
7. இலக்கண அறிவைப் பெற்றுச் சரியாகப் பயன்படுத்துதல்.
8. நன்னெறிப்பண்பு, இணக்கப்போக்கு, நாட்டுப்பற்று ஆகியவற்றை உய்த்துணர்ந்து அதன்படி நடத்தல்.

தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல்வழி, படிவம் நான்கு இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:

1. செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைப் பகுத்தாய்ந்து தொகுத்துக் கூறுதல்.
2. தகவல்களை விவரித்துக் கூறுதல்; நேர்காணலில் பங்கேற்றல்; வருணனை செய்தல்.
3. வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களை வகைப்படுத்துதல்; மதிப்பிடுதல்; ஒரு முடிவுக்கு வருதல்.
4. பல்வேறு துறைசார்ந்த வாசிப்புப் பகுதிகளை வாசித்தல்; கருத்துணர்தல்.
5. பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைத்தல்.
6. செய்யுளையும் மொழியணியையும் அறிந்து உய்த்துணர்தல்; பயன்படுத்துதல்.
7. இலக்கண அறிவைப் பெற்றுச் சரியாகப் பயன்படுத்துதல்.

தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல்வழி, படிவம் ஐந்து இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:

1. செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்துக் கூறுதல்.
2. காரண காரியங்களை விவரித்துக் கூறுதல்; பண்புடன் பேச்சுவார்த்தை நடத்துதல்; சூழலை வருணனை செய்தல்.
3. வாசிப்புப் பகுதிகளிலுள்ள முக்கியத் தகவல்களைப் பகுத்தாய்ந்து ஒரு முடிவுக்கு வருதல்.
4. பல்வேறு துறைசார்ந்த வாசிப்புப் பகுதிகளை வாசித்தல்; கருத்துணர்தல்.
5. பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைத்தல்.
6. செய்யுளையும் மொழியணியையும் அறிந்து உய்த்துணர்தல்; பயன்படுத்துதல்.
7. இலக்கண அறிவைப் பெற்றுச் சரியாகப் பயன்படுத்துதல்.


**இடைநிலைப்பள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தின் அமைப்பு**

கே.எஸ்.எஸ்.எம். கலைத்திட்டம் கீழ்க்கண்ட ஆறு உத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது:

(i) தொடர்பு
(ii) ஆன்மிகம், நடத்தை, பண்பு
(iii) மனிதவியல்
(iv) சுய சால்புடைமை
(v) உடல்வளர்ச்சியும் முருகுணர்ச்சியும்
(vi) அறிவியலும் தொழில்நுட்பமும்

இடைநிலைப்பள்ளிக்கு வரையறுக்கப்பட்ட ஒவ்வோர் உத்திரமும் தொடக்கப்பள்ளியில் கற்ற அறிவு, திறன், பண்பு ஆகியவற்றின் தொடர்ச்சியாகும். மேலும், இக்கலைத்திட்டம் கே.பி.எஸ்.எம். கலைத்திட்டத்தின் கோட்பாடுகளையும் நிலைநிறுத்தியுள்ளது.

ஒவ்வோர் உத்திரத்திலும் வரையறுக்கப்பட்டுள்ள அறிவு, திறன், பண்பு ஆகியவற்றின் கூறுகள் பாடங்கள், இணைப்பாடங்கள்வழி வெளிப்படுத்தப்படுகின்றன. இஃது ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையுள்ள சமன்நிலை மாந்தர் உருவாக்கத்தை வலியுறுத்தும் கல்வியின் இலக்கை அடைய உதவுகிறது (விளக்கப்படம் 1).




**விளக்கப்படம் 1: இடைநிலைப்பள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தின் அமைப்பு**

**கலைத்திட்டக் குவிவு**

மாணவர்கள் இடைநிலைப்பள்ளியில் படிவம் 1-3 வரை, பல்வேறு சூழல்களில் தரமான மொழியைப் பயன்படுத்தவும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் தரமான படைப்பிற்கு அடிப்படை மொழித்திறன்களின் ஆளுமையைச் செம்மைப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. படிவம் 4-5 வரை மொழி ஆளுமையைப் பெறவும் விளைபயன்மிக்க வகையில் தொடர்பு கொள்ளவும் வாசித்து உய்த்துணரவும் படைப்பாற்றலை மேம்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்மொழியின் சிறப்பிற்கேற்பக் கற்றல்கற்பித்தலைச் செம்மைப்படுத்தும் நோக்கில் பொதுவறிவு, நற்பண்பு, குடிமை, சமுதாயப் பண்பாட்டு நெறிமுறைகள் ஆகியவையும் தமிழ்மொழிக் கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

**21ஆம் நூற்றாண்டிற்கான திறனும் பண்பும்**

இடைநிலைப்பள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று 21ஆம் நூற்றாண்டின் திறன்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதாகும். குறிப்பாகச் சிந்திப்பதிலும் வாழ்வியல் திறனிலும் தொழில் தர்மத்திலும் மேம்பாடடைந்த மாணவர்கள் உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது வெற்றி பெற ஒவ்வொரு மாணவரும் கைவரப்பெற வேண்டிய திறனும் பண்பும் அட்டவணை 1இல் விவரிக்கப்பட்டுள்ள மாணவரின் சுயவிவரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: மாணவரின் சுயவிவரம்**

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **தாங்கும் வலிமை** | இடர்களையும் சவால்களையும் அறிவுடனும் நம்பிக்கையுடனும் சகிப்புத்தன்மையுடனும் பரிவுடனும் எதிர்கொண்டு வெல்லும் திறன் கொண்டிருப்பர். |
| **தொடர்புகொள்ளும் திறன்** | பல்வகை ஊடகங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திச் சிந்தனை, ஏடல், தகவல் ஆகியவற்றைத் தன்னம்பிக்கையுடனும் ஆக்ககரமாகவும் பேச்சு, எழுத்து மூலம் வெளிப்படுத்துவர். |

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **சிந்தனையாளர்** | ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனை உடையவர்; சிக்கல்களைக் களைந்து நியாயமான முடிவெடுப்பவர்; மாணவர் நிலையில் நின்று கற்றலைச் சிந்திப்பவர்; தனிமனிதர் மற்றும் சமுதாயத்தின் நோக்குநிலை, பண்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றைத் திறந்த மனத்தோடு பார்ப்பவர்; தன்னம்பிக்கையோடும் ஆக்கத்தோடும் புதியதைக் கற்றுக் கொள்பவர். |
| **குழுவாகச் செயல்படுதல்** | விளைபயன்மிக்க வகையிலும் சுமூகமாகவும் பிறருடன் ஒத்துழைப்பர்; குழு உறுப்பினர் ஒவ்வொருவரின் பங்களிப்பை மதிப்பதோடு குழுவோடு சேர்ந்து பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்; ஒருங்கிணைந்து செயல்படுவதன்வழி பிறரிடைத்தொடர்புத் திறனைப் பெறுதல். இதன்வழி சிறந்த தலைவராகவும் குழு உறுப்பினராகவும் இருக்கும் தகுதியைப் பெற்றிருப்பர். |
| **அறியும் ஆர்வம்** | புதிய அணுகுமுறையையும் ஏடல்களையும் தெரிந்து கொள்வதற்கு ஆர்வத்தை ஏற்படுத்திக் கொள்பவர். ஆய்வு மேற்கொள்ளத் தேவையான திறன்களைக் கற்பதோடு சுயமாகவும் கற்கக் கூடியவர். வாழ்நாள் கற்றல் அனுபவங்களைத் தொடர்ச்சியாக நுகர்ந்து மகிழ்வர். |

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **கொள்கையுள்ளவர்** | தனிநபர் மற்றும் சமூகத்தின் தன்மானத்தை மதிப்பதோடு நாணயம், நேர்மை, சமத்துவம், நீதி ஆகிய பண்புகளையும் கொண்டிருப்பர். தங்களின் முடிவுகளுக்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவுகளுக்கும் பொறுப்பேற்பர். |
| **தகவல் நிறைந்தவர்** | பல்வேறு துறைசார்ந்த அறிவினைப் பெற்று அதனை ஆழமாகவும் விரிவாகவும் புரிந்து கொள்வர். உள்நாட்டு, அனைத்துலக விவகாரங்களைத் திறமையாகவும் விளைபயனுள்ள வகையிலும் ஆராய்வர். கிடைக்கப்பெற்ற தகவல்கள் தொடர்பான நன்னெறி /சட்டச் சிக்கல்களைப் புரிந்திருப்பர். |
| **அன்பானவர்/ பரிவுள்ளவர்** | பிறர் தேவையையும் உணர்வையும் புரிந்து கொண்டு மதிப்பும் பரிவும் இரக்கமும் காட்டுவர். சமுதாயச் சேவையில் தங்களை முனைப்புடன் ஈடுபடுத்திக் கொள்வர். சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்வர். |
| **நாட்டுப்பற்று** | நாட்டின் மீது அன்பையும் மரியாதையையும் ஆதரவையும் காட்டுவர். |

**உயர்நிலைச் சிந்தனைத்திறன்**

கற்றல்கற்பித்தலில் ஆசிரியர்கள் உயர்நிலைச் சிந்தனைத்திறனைச் சரியாகப் பொருள்பெயர்ப்புச் செய்து மாணவர்களின் சிந்தனையை முறைப்படுத்தும் வகையில் அது கலைத்திட்டத்தில் தெரிநிலையில் எழுதப்பட்டுள்ளது. அட்டவணை 2இல் உயர்நிலைச் சிந்தனைத்திறனின் நான்கு சிந்தனைப் படிநிலைகள் விளக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2: உயர்நிலைச் சிந்தனைத்திறனுக்கான சிந்தனைப் படிநிலைகள்**

| சிந்தனைப் படிநிலைகள் | விளக்கம் |
|---|---|
| **பயன்படுத்துதல்** | அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பல்வேறு சூழல்களில் பயன்படுத்தி ஒன்றைச் செய்தல். |
| **பகுத்தாய்தல்** | தகவலைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அவற்றை ஆழமாகப் புரிந்து கொள்வதோடு அவற்றுக்கிடையிலான தொடர்பையும் அறிதல். |
| **மதிப்பிடுதல்** | அறிவு, அனுபவம், திறன், பண்பு ஆகியவற்றைக் கொண்டு பரிசீலனை செய்தல்; முடிவெடுத்தல்; நியாயப்படுத்துதல். |
| **உருவாக்குதல்** | ஆக்கப் புத்தாக்கத் தன்மையைக் கொண்ட பொருள், ஏடல், வழிமுறை ஆகியவற்றை உருவாக்குதல். |

அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பயன்படுத்திச் சீர்தூக்கிப் பார்த்து, மீட்டுணர்ந்து சிக்கல் களையவும் முடிவெடுக்கவும் புத்தாக்கச் சிந்தனையுடன் ஒன்றை உருவாக்கவும் பயன்படுகின்ற சிந்தனை ஆற்றலே உயர்நிலைச் சிந்தனைத்திறனாகக் கருதப்படுகின்றது.
உயர்நிலைச் சிந்தனைத்திறன் ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை, சீர்தூக்கிப் பார்த்தல், சிந்தனை வியூகம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

**ஆய்வுச் சிந்தனை** என்பது தக்கக் காரணங்களையும் சான்றுகளையும் கொண்டு அறிவார்ந்த நிலையில் ஏரணமாகச் சீர்தூக்கிப் பார்த்து மதிப்பீடு செய்யும் ஆற்றலாகும்.

**ஆக்கச் சிந்தனை** என்பது கற்பனை ஆற்றலைக் கொண்டு பாரம்பரிய முறையில் இல்லாமல் மாறுபட்ட கோணத்தில் மதிப்புயர்வுமிக்க புதிய ஒன்றனை உருவாக்கும் ஆற்றலாகும்.

**சீர்தூக்கிப் பார்த்தல்** என்பது ஏரணமான முறையில் பரிசீலனை செய்யவும் மதிப்பிடவும் கூடிய ஆற்றலாகும்.

**சிந்தனை வியூகம்** என்பது சிக்கலுக்குத் தீர்வுகாணும் வகையில் கட்டமைப்பினைக் கொண்ட தீர்க்கமான சிந்தனையாகும்.

சீர்தூக்கிப் பார்த்தல், ஆய்ந்தறிதல்வழி கற்றல், சிக்கலுக்குத் தீர்வுகாணுதல், செயல்திட்டம் ஆகிய நடவடிக்கைகள்வழி உயர்நிலைச் சிந்தனைத்திறனை வகுப்பறையில் கற்பிக்கலாம். சிந்தனைவரைவு, மனவோட்டவரைவு போன்ற சிந்தனைக்கருவிகளைப் பயன்படுத்தியும் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகள் வாயிலாகவும் ஆசிரியர்கள் மாணவர்களின் சிந்தனைத்திறனை வளர்க்கலாம்.

**விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல் அணுகுமுறை**

அறிவையும் திறன்களையும் கைவரப் பெறுவதற்கும் நற்பண்புகளை உய்த்துணர்வதற்கும் கற்றல்கற்பித்தல் அணுகுமுறையானது மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைதல் வேண்டும். விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல், மாணவர் மையமாக இருப்பதோடு சிறந்த நடவடிக்கைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், கற்றல்கற்பித்தல் அணுகுமுறை மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புடையதாகவும் அர்த்தமுள்ளதாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் அமைதல் வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளில் மாணவர்களின் முழுமையான ஈடுபாடும் முக்கியமாகக் கருதப்படுகிறது. சிறப்பான கற்றல்கற்பித்தலோடு ஆசிரியர் மாணவர்களுக்குத் தலைமைத்துவம், பொறுப்புணர்வு, தன்நிலையுணர்வு போன்ற கூறுகளை வலியுறுத்திக் குழுவில் செயல்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

கட்டுவியம், சூழலமைவுக் கற்றல், செயல்திட்ட அடிப்படையிலான கற்றல், ஆய்ந்தறிதல்வழி கற்றல், எதிர்காலவியல், சிக்கல் அடிப்படையிலான கற்றல் போன்றவை விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல் அணுகுமுறைகளாகக் கருதப்படுகின்றன. இவை மாணவர்களின் புரிதலையும் கற்றலையும் மேம்படுத்த வழிகோலும். இந்த அணுகுமுறைகள் பற்றிய விளக்கம் பின்வருமாறு:

**கட்டுவியம்**

கட்டுவியம் என்பது மாணவர்கள் முன்னறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு தங்களின் சிந்தனை அல்லது கருத்துக்கோடலை உருவாக்கிக் கொள்ளும் கற்றல் அணுகுமுறையாகும். இந்தக் கற்றல் அணுகுமுறைவழி மாணவர்கள் தாங்கள் பெறுகின்ற தகவலையும் முன்னறிவையும் இணைத்துப் புதிய சிந்தனையைப் பெறுவர். இவ்வணுகுமுறையை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்திப் பயன்பெற ஆசிரியர் உயர்நிலைச் சிந்தனைக்கேள்விகளைக் கற்றல்கற்பித்தலில் கையாளுவது அவசியம்.

**சூழலமைவுக் கற்றல்**

சூழலமைவுக் கற்றல் என்பது தனிமனித, சமூக, பணியிட அனுபவத்தையும் பாடப்பொருளையும் தொடர்புபடுத்திக் கற்கும் அணுகுமுறையாகும். இவ்வணுகுமுறை, செயல் மற்றும் சிந்தனைப்

பூர்வமான நடவடிக்கைகளின்வழி உறுதியான கற்றலுக்கு வழிவகுப்பதோடு மாணவர்கள் தங்களின் முன்னறிவைப் பல்வேறு சூழலில் பயன்படுத்தவும் துணைபுரிகின்றது.

**செயல்திட்ட அடிப்படையிலான கற்றல்**

செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் என்பது நீண்ட கால இடுபணி நடவடிக்கைகளின்வழி அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைக் கைவரப்பெறச் செய்யும் ஓர் அணுகுமுறையாகும். கொடுக்கப்படும் இடுபணியானது பல்வேறு துறைசார்ந்த நடப்பு விவகாரங்கள், வாழ்க்கை நடைமுறைகள் ஆகியவற்றோடு மாணவரை மையமாகக் கொண்டதாகவும் அமைதல் வேண்டும். இவ்வணுகுமுறை, மாணவர்கள் சிக்கலை ஆராயவும் தகவல் திரட்டித் தீர்மானம் எடுக்கவும் புரிதலை மேம்படுத்திக் கொள்ளவும் வழிவகுக்கின்றது.

**ஆய்ந்தறிதல்வழி கற்றல்**

ஆய்ந்தறிதல்வழி கற்றல் என்பது கேட்கப்படும் கேள்விக்கான விடைகளை ஆய்வுசெய்து கண்டறியும் அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறை ஆய்வு செய்தல், விசாரணை செய்தல், தரவுகளைச் சேகரித்தல், முடிவெடுத்தல் ஆகிய நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. இதன்வழி மாணவர்கள் சிக்கல் களையவும் ஆய்வையொட்டிய சிந்தனைமீட்சி செய்யவும் சிக்கல் தொடர்பான கருத்துப் பரிமாற்றம் செய்யவும் தேவைப்படுகின்ற திறன்களைப் பெறுவர்.

**எதிர்காலவியல்**

எதிர்காலவியல் என்பது மாணவர்களுக்கு எதிர்காலத்தில் கிடைக்கவிருக்கும் வாய்ப்பு, ஏற்படப்போகும் விவகாரம், சிக்கல் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வைக் கொடுக்கும் ஒரு கற்றல்முறையாகும். இந்தக் கற்றல்முறை மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட திறன்களை அளிக்கின்றது:

- எதிர்காலத்தை அனுமானித்தல்.
- எதிர்கால விளைவுகளை ஊகித்தறிதல்.
- எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளுதல்.

**சிக்கல் அடிப்படையிலான கற்றல்**

சிக்கல் அடிப்படையிலான கற்றல் என்பது கொடுக்கப்படும் சிக்கலுக்கு மாணவர்கள் சுயமாகத் தீர்வுகாணும் கற்றல் அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறையில் மாணவர்கள் சிக்கலைப் புரிந்து கொள்ளவும் அதற்கான தீர்வினைக் கண்டறிந்து செயல்படுத்தவும் தெரிந்து கொள்வர். மாணவர்கள் ஆக்ககரமாகவும் ஆய்வுச் சிந்தனையோடும் செயல்பட இந்த அணுகுமுறை உதவுகிறது.

**பயிற்றி அணுகுமுறை**

பயிற்றி அணுகுமுறையில் கீழ்க்கண்ட ஐந்து கூறுகள் அடங்கியுள்ளன:

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| **கேட்டல், பேச்சு** | **வாசிப்பு** | **எழுத்து** | **செய்யுளும் மொழியணியும்** | **இலக்கணம்** |

**விளக்கப்படம் 2: பயிற்றி அணுகுமுறையின் கூறுகள்**

இந்த அணுகுமுறையில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படை மொழித்திறன்கள் தனித்துக் கற்றுத் தரப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மொழித்திறனையும் மாணவர்கள் சிறந்த முறையில் கைவரப்பெற வேண்டும் என்பதற்காக இவ்வாறு பரிந்துரைக்கப்படுகிறது. செய்யுளும் மொழியணியும், இலக்கணம் ஆகியவற்றைக் கற்பிக்கும் போது அடிப்படை மொழித்திறன்களை ஒருங்கிணைத்துக் கொள்ளலாம்.

**கருப்பொருள் அடிப்படையிலான கற்றல்**

கருப்பொருள் அடிப்படையிலான கற்றலில் ஆசிரியர் ஒரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படைத் திறன்களுக்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிடுதல் வேண்டும். இடைநிலைப்பள்ளிக்கான பரிந்துரைக்கப்பட்ட கருப்பொருள்கள் பின்வருமாறு:

- மொழி
- இலக்கியம்
- பண்பாடு
- கலை
- வணிகவியல்
- சுகாதாரம்
- புவியியல்
- சமயம்
- உணவு
- பயனீட்டாளர் கல்வி
- வரலாறு
- குடியியல்
- விளையாட்டு
- பொருளாதாரம்
- அறிவியல்
- சமூகவியல்
- சுற்றுச்சூழல்
- தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்
- குடும்பவியல்
- போதைப்பொருள்
- பாதுகாப்பு
- போக்குவரத்து
- மனிதவள மேம்பாடு
- நன்னெறி

**விரவி வரும் கூறுகள்**

விரவி வரும் கூறுகள் உள்ளடக்கத் தரத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவற்றைத் தவிர்த்துக் கற்றல்கற்பித்தலில் கூடுதலாக இணைக்கப்பட வேண்டிய கூறுகளாகும். இவை, மாணவர்களின் திறனையும் சால்பையும் திடப்படுத்துகின்றன. தற்கால, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் சமன்நிலையிலான மனித மூலதனத்தை உருவாக்குவதற்காகவே கற்றல்கற்பித்தலில் கீழ்க்கண்ட விரவி வரும் கூறுகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

1. **மொழி**

- எல்லாப் பாடங்களிலும் மொழி சரியாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் ஏடல்களை விளைபயன்மிக்க வகையில் நல்ல மொழியைப் பயன்படுத்தி வெளிப்படுத்த உதவும் வகையில் ஒவ்வொரு பாட கற்றல்கற்பித்தலின் போதும் ஆசிரியர் மாணவர்களின் உச்சரிப்பு, வாக்கிய அமைப்பு, இலக்கணம், கலைச்சொல் பயன்பாடு, மொழிநடை ஆகியவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

2. **சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்**

- அனைத்துப் பாட கற்றல்கற்பித்தலின் போதும் சுற்றுச்சூழலை நேசித்தல், பராமரித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தின் விழிப்புணர்வை மாணவர்களின் மனத்தில் பதியவைக்க வேண்டும்.
- சுற்றுச்சூழல் தொடர்பான அறிவும் விழிப்புணர்வும் மாணவரிடையே சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பண்பை வளர்க்க உதவும்.

3. **நன்னெறிப் பண்பு**

- மாணவர்கள் நற்பண்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனைக் கடைப்பிடிக்கும் பொருட்டு அனைத்துப் பாடங்களிலும் நன்னெறிப் பண்பு வலியுறுத்தப்பட வேண்டும்.
- ஆன்மிகம், மனிதவியல், குடியியல் ஆகிய நன்னெறிப் பண்பு அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய கூறுகளாகும்.

4. **அறிவியலும் தொழில்நுட்பமும்**

- மாணவர்களிடையே அறிவியல், தொழில்நுட்ப ஆர்வத்தை வளர்ப்பதன்வழி அவர்களின் அறிவியல், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த இயலும்.

- கற்றல்கற்பித்தலில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், விளைபயன்மிக்க கற்றலை உருவாக்க உதவும்.
- கற்றல்கற்பித்தலில் அறிவியல், தொழில்நுட்ப இணைப்பு கீழ்க்கண்ட நான்கு கூறுகளை உள்ளடக்கியுள்ளது.
  - (i) அறிவியல், தொழில்நுட்ப அறிவு (அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த கருத்து, கோட்பாடு, கருத்துக்கோடல்)
  - (ii) அறிவியல் திறன் (அறிவியல் சிந்தனையும் கையாளும் திறனும்)
  - (iii) அறிவியல் பண்பு (துல்லியம், நேர்மை, பாதுகாப்பு)
  - (iv) கற்றல்கற்பித்தலில் தொழில்நுட்பப் பயன்பாடு

### 5. நாட்டுப்பற்று

- எல்லாப் பாடங்கள், புறப்பாட நடவடிக்கைகள், சமூக சேவைகள் ஆகியவற்றின்வழி மாணவர்களிடையே நாட்டுப்பற்றை வளர்க்க இயலும்.
- நாட்டை நேசிக்கும் மலேசியக் குடிமகன் என்ற பெருமிதம் கொண்ட மாணவர்களை உருவாக்க இயலும்.

### 6. ஆக்கமும் புத்தாக்கமும்

- ஆக்கம் என்பது கற்பனை ஆற்றலைக் கொண்டு ஏடலைச் சேகரித்துப் பகுத்தாய்ந்து புதிதான அல்லது அசலான ஒன்றை உருவாக்குவதாகும்.
- ஆக்கச் சிந்தனையின்வழி ஏடலை மாற்றம் செய்து சீர்செய்து அதனை அமலாக்கப்படுத்துவதே புத்தாக்கம் ஆகும்.
- ஆக்கமும் புத்தாக்கமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றன. இவை 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் மனித மூலதனத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன.
- ஆக்கப் புத்தாக்கக் கூறுகள் கற்றல்கற்பித்தலில் முறையாக இணைக்கப்படுதல் வேண்டும்.

### 7. தொழில்முனைப்பு

- தொழில்முனைவருக்கு இருக்க வேண்டிய தன்மைகளை மாணவர்களிடையே உருவாக்குவதையும் அவற்றை வாழ்வியல் பண்பாடாக வழக்கப்படுத்துவதையும் தொழில்முனைப்புக் கூறு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சுறுசுறுப்பு, நேர்மை, நம்பகத்தன்மை, பொறுப்புணர்ச்சி, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனை போன்றவற்றைக் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளில் புகுத்துவதன்வழி தொழில்முனைப்புத் திறனை மாணவர்களிடையே வளர்க்க இயலும்.

## 8. தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைக் கற்றல்கற்பித்தலில் இணைப்பதன்வழி மாணவர்கள் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அறிவையும் பயன்பாட்டினையும் அறிவதோடு அவற்றைத் திடப்படுத்திக்கொள்ளவும் முடியும்.
- தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மாணவர்களை ஆக்கச் சிந்தனை உடையவர்களாக உருவாக்குவதோடு கற்றல்கற்பித்தல் கவர்ச்சிகரமானதாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் அமைய வழிவகுக்கும். இதன்வழி, மாணவர்களின் கற்றல் தரம் உயரும்.
- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் கூறுகள் கற்றல்கற்பித்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புக்குப் பொருத்தமானதாக அமைவதை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும். இது, மாணவர்கள் பாடத்தின் உள்ளடக்கத்தைச் சிறந்த முறையில் விளங்கிக்கொள்ள வழிவகுக்கும்.
- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தில் முக்கியமாக வலியுறுத்தப்படுபவற்றுள் ஒன்று, எல்லாப் பாடங்களிலும் அமலாக்கம் செய்யக்கூடிய கணினியச் சிந்தனையாகும். இச்சிந்தனை கணினியைத் துணையாகக் கொண்டு அதன் பல்வகைச் செயல்பாட்டிற்கேற்பச் சிக்கலுக்குத் தீர்வுகாண வழிவகுக்கின்றது.

## 9. உலகளாவிய நிலைத்தன்மை

- உற்பத்தி மற்றும் பயன்பாடு, உலகளாவிய குடிமை, ஒற்றுமை ஆகியவற்றின்வழி கிடைக்கப்பெறுகின்ற அறிவையும் திறனையும் பண்பையும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தி, சுற்றுச்சூழலைப் பொறுப்புடன் கையாளுவதற்குத் தேவைப்படும் நிலைத்தன்மையான சிந்தனையைப் பெற்ற மாணவரை உருவாக்குவதையே உலகளாவிய நிலைத்தன்மைக்கூறு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உள்ளூர், நாடு, உலகளாவிய சவால்களையும் நிகழ்காலச் சிக்கல்களையும் மாணவர்கள் எதிர்நோக்க உலகளாவிய நிலைத்தன்மைக்கூறு முக்கியமாகக் கருதப்படுகின்றது.
- இக்கூறு பாடத்தில் நேரிடையாகவும் இடைச்செருகலாகவும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது.

**10. நிதிக்கல்வி**

- நிதிக்கல்விக்கூறு பொறுப்புள்ள வகையில் நிதியை நிர்வகிக்கவும் நேர்மையான வகையில் நிதி நிர்வாகத்தைச் செயல்படுத்தவும் அறிவார்ந்த நிலையில் நிதி தொடர்பான முடிவெடுக்கவும் கூடிய திறமையான எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.
- நிதிக்கல்விக்கூறு மாணவர்களுக்கு நேரிடையாகவும் இடைச்செருகலாகவும் கற்பிக்கப்படுகிறது. வட்டி கணக்கீட்டு முறை போன்ற நிதி தொடர்பான தலைப்புகள் நேரிடையாகக் கற்பிக்கும் வகையில் தர ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மற்றத் தலைப்புகள் இடைச்செருகலாக விரவி வரும் கூறுகள் அணுகுமுறையில் கற்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விளைபயன்மிக்க வகையில் நிதி நிர்வாகத்தை மேற்கொள்ள மாணவர்களுக்கு நிதிக்கல்வி மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது.

**வகுப்பறை மதிப்பீடு**

மாணவரின் கற்றல் வளர்ச்சியை அறிந்து கொள்வதற்காக ஆசிரியர் மேற்கொள்ளும் நடவடிக்கையே வகுப்பறை மதிப்பீடாகும். ஆசிரியர் இதனைத் திட்டமிடுவதோடு முறையாக அமலாக்கம் செய்து கிடைக்கப் பெறும் தகவலை அறிக்கையின்வழி வெளியிடுதல் வேண்டும். மாணவரின் அடைவுநிலையை நிர்ணயம் செய்வதற்கு இந்நடவடிக்கையை ஆசிரியர் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

முறைசார்ந்த மற்றும் முறைசாரா மதிப்பீட்டு முறைகளில் ஆசிரியர் வகுப்பறை மதிப்பீட்டை மேற்கொள்ளலாம். கற்றல்கற்பித்தல் செயலாக்கத்தின் போது நடைபெறுவதே முறைசாரா மதிப்பீடு. ஒரு பாடத்தொகுதியின் இறுதியிலோ ஆண்டின் இறுதியிலோ நடத்தப்படுவது முறைசார்ந்த மதிப்பீடாகும். தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தின் அடிப்படையில் ஆசிரியர் திட்டமிடுதல், வினா மற்றும் மதிப்பீட்டுக் கருவி உருவாக்குதல், அவற்றை நிர்வகித்தல், புள்ளி வழங்குதல், முடிவுகளைப் பதிவு செய்தல், அறிக்கை தயாரித்தல் ஆகிய முக்கியப் பணிகளைச் செயல்படுத்த வேண்டும்.

மாணவரின் திறனையும் அடைவுநிலையையும் மேம்படுத்துவதற்கு மதிப்பீடு உதவியாக இருக்கும் பொருட்டு ஆசிரியர் கீழ்க்கண்ட

தன்மைகளைக் கொண்ட மதிப்பீட்டை அமலாக்கம் செய்தல் வேண்டும்:

- அவதானிப்பு, பேச்சு, எழுத்து போன்ற பல்வகை மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்துதல்.
- ஆசிரியரும் மாணவரும் செயல்படுத்தக்கூடிய பல்வகை மதிப்பீட்டு அணுகுமுறைகளைப் பயன்படுத்துதல்.
- மாணவர்கள் கற்ற பல்வகை அறிவு மற்றும் திறன்களின் அளவைக் கருத்தில் கொள்ளுதல்.
- மாணவர்கள் பல்வகை கற்றல் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் அமைதல்.
- கற்றல் தரம், தர அடைவு ஆகியவற்றின் அடிப்படையில் மாணவர்களின் அடைவுநிலையை மதிப்பீடு செய்தல்.
- குறைகளைக் களைவதற்கும் வளப்படுத்துவதற்கும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

ஆசிரியர் மாணவர்களின் அடைவுநிலையைப் பொருத்தமான வகையில் குறித்து வைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு மொழித்திறனையும் கற்பித்த பிறகு வழங்கப்பட்டுள்ள அறிக்கை வார்ப்புருவில் பதிவு செய்தல் வேண்டும்.

**ஒட்டுமொத்த அடைவுநிலை**

மாணவரின் ஒட்டுமொத்த அடைவுநிலையை ஒவ்வோர் ஆண்டு இறுதியிலும் நிர்ணயம் செய்தல் வேண்டும். ஒட்டுமொத்த அடைவுநிலை அறிவு, திறன், பண்பு ஆகிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது. மாணவர்களுடனான கற்றல்கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டு ஆசிரியர் மதிப்பீடு செய்தல் வேண்டும். அந்த மதிப்பீடு ஆசிரியரின் தொழிற்றகைமை அடிப்படையில் அமைதல் வேண்டும். தமிழ் கற்பிற்கும் சக ஆசிரியர்களுடனான கலந்துரையாடல், ஒட்டுமொத்த அடைவுநிலை பற்றிய புரிதலை மேம்படுத்தும். ஒட்டுமொத்த அடைவுநிலையை அட்டவணை 3 விவரிக்கின்றது.

**அட்டவணை 3: தமிழ்மொழிக்கான ஒட்டுமொத்த அடைவுநிலை**

| அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
|---|---|
| 1<br>**மிகக் குறைவு** | மாணவர்க்கு **மிகக் குறைந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்கு அதிகமான வழிகாட்டலும் பயிற்சியும் தேவைப்படுகிறது. |
| 2<br>**குறைவு** | மாணவர்க்குக் **குறைந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்குச் சிறிது வழிகாட்டலும் பயிற்சியும் தேவைப்படுகிறது. |
| 3<br>**திருப்தி** | மாணவர்க்கு **ஓரளவு** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்குச் சிந்திக்கும் திறனோடு எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 4<br>**நன்று** | மாணவர்க்கு **நல்ல** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்கு ஆய்வுச் சிந்தனையோடு எண்ணங்களையும் கருத்துகளையும் ஏரணச் சிந்தனையோடு வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. மாணவர்க்கு ஓரளவு சுயமாகக் கற்கும் திறனும் உள்ளது. |
| 5<br>**சிறப்பு** | மாணவர்க்குச் **சிறந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்கு ஆய்வு, ஆக்கச் சிந்தனையோடு ஏரணமான எண்ணங்களையும் கருத்துகளையும் தெளிவாகவும் விளக்கமாகவும் விளைபயன்மிக்க வகையில் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. மாணவர்க்குச் சுயமாகக் கற்கும் திறனும் உள்ளது. |
| 6<br>**மிகச் சிறப்பு** | மாணவர்க்கு **மிகச் சிறந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்கு ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு ஏரணமான எண்ணங்களையும் கருத்துகளையும் தெளிவாகவும் விளக்கமாகவும் நிரல்படவும் விளைபயன்மிக்க வகையில் தயக்கமில்லாமல் கவரும் வகையில் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. பிற மாணவர்களுக்கு உதாரணமாக இருப்பதோடு சுயமாகக் கற்கும் திறனும் உள்ளது. |

**உள்ளடக்க அமைப்பு**

இடைநிலைப்பள்ளிக்கான தமிழ்மொழித் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் மாணவர்கள் அடையவேண்டிய உள்ளடக்கத் தரத்தையும் கற்றல் தரத்தையும் தர அடைவையும் வலியுறுத்துகின்றது. அட்டவணை 4இல் இவை விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4: தர விவரிப்பு**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட பள்ளி கால அளவில் மாணவர்கள் கல்வி தொடர்பான அறிவு, திறன், பண்புநெறி ஆகிய கூறுகளை உள்ளடக்கிய கூற்றினைப் பற்றித் தெரிந்து கொள்வதையும் அதன்படி இயங்குவதையும் உறுதிப்படுத்துவதே உள்ளடக்கத் தரமாகும். | ஒவ்வோர் உள்ளடக்கத் தரத்திற்கேற்பத் தரமான கற்றல், அடைவுநிலை ஆகியவற்றை உறுதி செய்வதே கற்றல் தரமாகும். | தர அடைவு என்பது மாணவர்களின் கற்றல் அடைவுநிலையை விவரிக்கும் ஒன்றாகும். இது மாணவர்களின் கற்றல் வளர்ச்சி நிலையைக் காட்டுவதாகும். |

இத்தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இலக்கணக் கூறுகள், செய்யுள், மொழியணி ஆகியவையும் இணைக்கப்பட்டுள்ளன. இந்தத் தமிழ்மொழிப் பாடம் அமலாக்கத்திலுள்ள சுற்றறிக்கைக்கேற்ப ஒவ்வொரு படிவத்திற்கும் ஒரு வருடத்தில் குறைந்தது 64 மணி நேரம் நடத்தப்படுதல் வேண்டும்.

**கேட்டல், பேச்சுத் திறன்**

கேட்டல், பேச்சுத் திறன்வழி மாணவர்கள் அன்றாட வாழ்வில் கிடைக்கப்பெறும் தகவல்களைச் சீர்தூக்கிப்பார்த்து, குறிப்பிட்ட துறையைச் சார்ந்த ஏடல்களைச் சூழலுக்கு ஏற்பத் தரமான மொழியில் வெளியிடுவர். வினவுவதன்வழி ஏடல், கருத்துக்கோடல் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பர்; புதிய ஏடல்களையும் கருத்துகளையும் தங்களது தேவைகளையும் தெளிவாக வெளியிடுவர். இத்திறனைக் கொண்டு மாணவர்கள் கவிதைகளையும் செய்யுள்களையும் வாசித்துத் தெளிவாகப் பொருள் கூறவும் பேச்சு, உரை ஆகியவற்றை உய்த்துணரவும் திறன் பெறுவர்.

**வாசிப்புத் திறன்**

வாசிப்புத் திறன்வழி மாணவர்கள் வாசித்த பல்வேறு படிவங்களின் கருத்தைப் புரிந்துகொண்டு அதன் தொடர்பான விளைபயன்மிக்க கருத்துரை, மதிப்பீடு, பொருள்பெயர்ப்பு ஆகியவற்றைச் செய்வர்.

மேலும், வாசிப்புப் படிவங்களின் முக்கியக் கருத்தையும் உட்பொருளையும் செவிமடுப்பவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் உரக்க வாசிப்பர்.

மாணவர்கள் வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்திப் பல்வேறு எழுத்துப் படிவங்களை வாசித்துப் புரிந்து கொண்டு கருத்துரைப்பர். பல்வேறு குறிவடிவங்களை வாசித்துப் பொருள்பெயர்ப்புச் செய்வர். தகவல்களைப் பெறுவதற்கு மேற்கோள் நூல்களையும் பிற ஆவணங்களையும் வாசிப்பர்.

**எழுத்துத் திறன்**

எழுத்துத் திறன்வழி மாணவர்கள் ஏடல்கள், கருத்துக்கோடல்கள், தாங்கள் பெற்ற அனுபவங்கள், கற்றலின் வாயிலாகப் பெற்ற அறிவுப்புலம் ஆகியவற்றை வெளியிடுவர். இத்திறன்வழி மாணவர்கள் பல்வகை எழுத்துப் படிவங்களைக் குறிப்பெடுப்பர்; படைப்புகளை உருவாக்குவர்.

**மொழிமுறைமை**

மொழிமுறைமை மொழி செயற்படும் விதத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக மொழிமுறைமையில் இலக்கணக் கூறுகளும் செய்யுளும் மொழியணியும் வரையறுக்கப்பட்டுள்ளன.

**செய்யுளும் மொழியணியும்**

செய்யுள், மொழியணி ஆகியவற்றின்வழி மாணவர்கள் வரையறுக்கப்பட்ட இலக்கியப் பகுதிகளை அறிந்து உய்த்துணர்வதோடு வளமான மொழியாற்றலுடன் படைப்புகளை உருவாக்குவர். இடைநிலைப்பள்ளிக்கான செய்யுளும் மொழியணியும் பின்வருமாறு:

- செய்யுள்
- பழமொழி
- இணைமொழி
- மரபுத்தொடர்
- உவமைத்தொடர்
- இரட்டைக்கிளவி

**இலக்கணம்**

தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் வாசிக்கவும் எழுதவும் இலக்கண அறிவைப் பெற்று அதனைச் சரியாகப் பயன்படுத்துவர். இடைநிலைப்பள்ளிக்கான இலக்கணக் கூறுகள் பின்வருமாறு:

- எழுத்தியல்
- சொல்லியல்
- புணரியல்
- வலிமிகும் இடங்கள்
- வலிமிகா இடங்கள்
- வாக்கிய வகைகள்
- தொடரியல்

# படிவம் நான்கிற்கான உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும் தர அடைவும்

**1.0 கேட்டல், பேச்சு**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 1.1 செவிமடுத்தவற்றைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். | மாணவர்கள்:<br>1.1.4 செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைப் பகுத்தாய்ந்து தொகுத்துக் கூறுவர். |
| 1.2 கேள்விகள் கேட்பர். | 1.2.5 குறைநிறை காணக் கேள்விகள் கேட்பர். |
| 1.3 திறம்படப் பேசுவர். | 1.3.7 நேர்காணலில் பங்கேற்பர்.<br>1.3.8 ஒன்றைப் பற்றி வருணனை செய்வர்.<br>1.3.9 சேவை, பொருள் ஆகியவற்றைப் பெறுவதற்காகப் பண்புடன் பேரம் பேசுவர். |
| 1.4 விவரித்துக் கூறுவர். | 1.4.6 தகவல்களை ஒப்பிட்டு விவரித்துக் கூறுவர். |
| 1.5 கருத்துரைப்பர்; முடிவு கூறுவர். | 1.5.4 அட்டவணையிலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர். |

**கேட்டல், பேச்சுக்கான தர அடைவு**

| தர அடைவு | |
|---|---|
| **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 1<br>மிகக் குறைவு | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைப் பகுத்தாய்ந்து தொகுத்துக் கூறவும் நேர்காணலில் பங்கேற்கவும் வருணனை செய்யவும் பேரம் பேசவும் தகவல்களை ஒப்பிட்டு விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். |
| 2<br>குறைவு | குறைந்த அளவிலும் தடுமாற்றத்துடனும் மட்டுமே செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைப் பகுத்தாய்ந்து தொகுத்துக் கூறவும் நேர்காணலில் பங்கேற்கவும் வருணனை செய்யவும் பேரம் பேசவும் தகவல்களை ஒப்பிட்டு விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். |
| 3<br>திருப்தி | ஓரளவு, செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைப் பகுத்தாய்ந்து தொகுத்துக் கூறவும் நேர்காணலில் பங்கேற்கவும் வருணனை செய்யவும் பேரம் பேசவும் தகவல்களை ஒப்பிட்டு விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். மேலும், ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறன் ஓரளவு உள்ளது. |
| 4<br>நன்று | நல்ல மொழிநடையில் சரளமாக, செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைப் பகுத்தாய்ந்து தொகுத்துக் கூறவும் நேர்காணலில் பங்கேற்கவும் வருணனை செய்யவும் பேரம் பேசவும் தகவல்களை ஒப்பிட்டு விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். மேலும், ஆய்வுச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 5<br>சிறப்பு | நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றிச் சரளமாகவும் தயக்கமில்லாமலும் செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைப் பகுத்தாய்ந்து தொகுத்துக் கூறவும் நேர்காணலில் பங்கேற்கவும் வருணனை செய்யவும் பேரம் பேசவும் தகவல்களை ஒப்பிட்டு விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். மேலும், ஆய்வு, ஆக்கச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 6<br>மிகச் சிறப்பு | நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றி ஏற்ற மொழியணியைப் பயன்படுத்திச் சரளமாகவும் தயக்கமில்லாமலும் கவரும் வகையிலும் செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைப் பகுத்தாய்ந்து தொகுத்துக் கூறவும் நேர்காணலில் பங்கேற்கவும் வருணனை செய்யவும் பேரம் பேசவும் தகவல்களை ஒப்பிட்டு விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். மேலும், ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |

## 2.0 வாசிப்பு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 2.1 சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர். | மாணவர்கள்:<br>2.1.8 நேர்காணலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.<br>2.1.9 கவிதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர். |
| 2.2 வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.2.6 வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களை வகைப்படுத்தி ஒரு முடிவுக்கு வருவர்.<br>2.2.7 வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களை மதிப்பிட்டு ஒரு முடிவுக்கு வருவர். |
| 2.3 கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர். | 2.3.10 பாதுகாப்புத் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.<br>2.3.11 விவசாயம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.<br>2.3.12 பொருளாதாரம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர். |

**வாசிப்புக்கான தர அடைவு**

| தர அடைவு | |
|---|---|
| **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 1<br>மிகக் குறைவு | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே வாசிப்புப் பகுதிகளை வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு வகைப்படுத்தவும் மதிப்பிடவும் முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| 2<br>குறைவு | குறைந்த அளவிலும் தடுமாற்றத்துடனும் மட்டுமே வாசிப்புப் பகுதிகளை வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு வகைப்படுத்தவும் மதிப்பிடவும் முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| 3<br>திருப்தி | ஓரளவு, வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு வகைப்படுத்தவும் மதிப்பிடவும் முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| 4<br>நன்று | வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்பச் சரளமாக வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு வகைப்படுத்தவும் மதிப்பிடவும் ஆய்வுச் சிந்தனையோடு ஏரணமான முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்குத் தெளிவாகப் பதிலளிக்கவும் இயலும். |
| 5<br>சிறப்பு | வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்பச் தயக்கமில்லாமல் சரளமாக வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு வகைப்படுத்தவும் மதிப்பிடவும் ஆய்வு, ஆக்கச் சிந்தனையோடு ஏரணமான முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்கு நல்ல மொழிநடையில் தெளிவாகப் பதிலளிக்கவும் இயலும். |
| 6<br>மிகச் சிறப்பு | வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்பத் தயக்கமில்லாமல் கவரும் வகையில் சரளமாக வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு வகைப்படுத்தவும் மதிப்பிடவும் ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு ஏரணமான முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்கு இலக்கணப்பிழையின்றி நல்ல மொழிநடையில் தெளிவாகப் பதிலளிக்கவும் இயலும். |

## 3.0 எழுத்து

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 3.3 தொகுத்து எழுதுவர். | மாணவர்கள்:<br>3.3.5 கவிதையிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுவர்.<br>3.3.6 உரைநடைப் பகுதியிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுவர். |
| 3.4 பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைப்பர். | 3.4.21 220 சொற்களில் கூட்டக் குறிப்பறிக்கை எழுதுவர்.<br>3.4.22 220 சொற்களில் நேர்காணல் எழுதுவர்.<br>3.4.23 220 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.<br>3.4.24 220 சொற்களில் வாதக் கட்டுரை எழுதுவர்.<br>3.4.25 220 சொற்களில் விவாதக் கட்டுரை எழுதுவர்.<br>3.4.26 220 சொற்களில் வருணனைக் கட்டுரை எழுதுவர்.<br>3.4.27 220 சொற்களில் தலைப்பையொட்டி உரை எழுதுவர்.<br>3.4.28 220 சொற்களில் கதை எழுதுவர். |

**எழுத்துக்கான தர அடைவு**

| தர அடைவு | |
|---|---|
| **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 1<br>மிகக் குறைவு | மிகக் குறைந்த அளவிலும் அதிக எழுத்துப்பிழையுடனும் மட்டுமே பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். |
| 2<br>குறைவு | குறைந்த அளவிலும் எழுத்துப்பிழையுடனும் மட்டுமே பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். |
| 3<br>திருப்தி | ஓரளவு, பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். மேலும், ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறன் ஓரளவு உள்ளது. |
| 4<br>நன்று | இலக்கணப்பிழையின்றி நல்ல மொழிநடையில் பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். மேலும், ஆய்வுச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 5<br>சிறப்பு | இலக்கணப்பிழையின்றியும் எழுத்துப்பிழையின்றியும் நல்ல மொழிநடையில் பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். மேலும், ஆய்வு, ஆக்கச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 6<br>மிகச் சிறப்பு | இலக்கணப்பிழையின்றியும் எழுத்துப்பிழையின்றியும் நல்ல மொழிநடையில் ஏற்ற மொழியணியைப் பயன்படுத்திக் கவரும் வகையில் பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். மேலும், ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |

## 4.0 செய்யுளும் மொழியணியும்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | மாணவர்கள்: |
| 4.2 திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.2.4 நான்காம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.3 பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.3.4 நான்காம் படிவத்திற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.4 இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.4.4 நான்காம் படிவத்திற்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.5 உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.5.4 நான்காம் படிவத்திற்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.6 மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.6.4 நான்காம் படிவத்திற்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.7 பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.7.4 நான்காம் படிவத்திற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

**குறிப்பு:**

செய்யுள், மொழியணிக்கான கற்றல் தரங்களைப் பேச்சு, எழுத்துத் திறன்களின் வாயிலாக மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும், செய்யுள், மொழியணிக்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் தனிப் பாடவேளையிலேயே நடைபெற வேண்டும்.

## 5.0 இலக்கணம்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | மாணவர்கள்: |
| 5.1 எழுத்திலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.1.4 குற்றியலுகரம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.2 சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.2.6 ஆகுபெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.3 புணர்ச்சி வகைகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.3.7 கெடுதல் விகாரப் புணர்ச்சியில் எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.3.8 கெடுதல் விகாரப் புணர்ச்சியில் திசைப்பெயர்ப் புணர்ச்சி பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.4 வலிமிகும் இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.4.5 ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.4.6 பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, உவமைத்தொகை ஆகியவற்றில் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.4.7 ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாய் இருப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 5.5 வலிமிகா இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.5.7 வினைத்தொகையிலும் உம்மைத்தொகையிலும் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.5.8 ஆறாம் வேற்றுமைத்தொகையில் நிலைமொழி உயர்திணையாய் இருப்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.5.9 இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.6 வாக்கிய வகைகளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 5.6.2 தொடர், கலவை வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 5.7 தொடரியலை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.7.1 தொகைநிலைத்தொடரில் வேற்றுமைத்தொகை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.7.2 தொகைநிலைத்தொடரில் வினைத்தொகை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.7.3 தொகைநிலைத்தொடரில் பண்புத்தொகை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.7.4 தொகைநிலைத்தொடரில் உவமைத்தொகை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.7.5 தொகைநிலைத்தொடரில் உம்மைத்தொகை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

**குறிப்பு:**

இலக்கணத்திற்கான கற்றல் தரங்களைப் பேச்சு, எழுத்துத் திறன்களின் வாயிலாக மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும், இலக்கணத்திற்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் தனிப் பாடவேளையிலேயே நடைபெற வேண்டும்.

# செய்யுளும் மொழியணியும்

## செய்யுள்

### அ. திருக்குறள்

1. எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. (426)

2. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783)

3. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. (594)

### ஆ. பல்வகைச் செய்யுள்

1. **விவேக சிந்தாமணி (புத்திக் கூர்மை)**

புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தி யற்றால்
எத்தனை விதத்தி னாலு மிடரது வந்தேதீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய வுவமை போல.

2. **நளவெண்பா (நளனது நல்லாட்சி)**

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் – மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும்
ஒரு கூட்டில் வாழ உலகு.

3. **குறுந்தொகை (அன்பின் திறம்)**

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர் அளவின்றே - சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

4. **சிலப்பதிகாரம் (கற்புத் தெய்வம்)**

என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்;
கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி, நாப்புலர வாடித்,
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி;
இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்!

## மொழியணி

### அ. இணைமொழி

1. அக்கம் பக்கம்
2. அரிய பெரிய
3. இன்ப துன்பம்
4. கால நேரம்
5. சாக்குப் போக்கு

### ஆ. உவமைத்தொடர்

1. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல
2. இருதலைக் கொள்ளி எறும்பு போல
3. நீர் மேல் எழுத்துப் போல
4. யானை வாயில் அகப்பட்ட கரும்பு போல
5. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல

### இ. மரபுத்தொடர்

1. நிறைகுடம்
2. கருணைக் கடல்
3. சாயம் வெளுத்தது
4. காதில் பூ வைத்தல்
5. தட்டிக் கொடுத்தல்

### ஈ. பழமொழி

1. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு.
2. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.
3. ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்.
4. கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு.
5. குந்தித் தின்றால் குன்றும் மாளும்.
6. அகல உழுவதினும் ஆழ உழுவது மேல்.
7. தீட்டின மரத்திலே கூர் பார்ப்பதா?
8. ஆடிக்கறப்பதை ஆடிக்கற பாடிக்கறப்பதைப் பாடிக்கற.
9. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
10. நொறுங்கத் தின்றால் நூறு வயது.

# இலக்கணம்

## அ. எழுத்திலக்கணம்

1. குற்றியலுகரம்

## ஆ. சொல்லிலக்கணம்

1. ஆகுபெயர்

## இ. புணர்ச்சி வகைகள்

1. கெடுதல் விகாரம்
   - எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி
   - திசைப்பெயர்ப் புணர்ச்சி

## ஈ. வலிமிகும் இடங்கள்

1. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில்
2. பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, உவமைத்தொகையில்
3. ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாய் இருப்பின்

## உ. வலிமிகா இடங்கள்

1. வினைத்தொகையிலும் உம்மைத்தொகையிலும்
2. ஆறாம் வேற்றுமைத்தொகையில் நிலைமொழி உயர்திணையாய் இருப்பின்
3. இரண்டாம் வேற்றுமைத்தொகையில்

## ஊ. வாக்கிய வகைகள்

1. தொடர் வாக்கியம்
2. கலவை வாக்கியம்

## எ. தொடரியல்

1. தொகைநிலைத்தொடர்
   - வேற்றுமைத்தொகை
   - வினைத்தொகை
   - பண்புத்தொகை
   - உவமைத்தொகை
   - உம்மைத்தொகை

# படிவம் ஐந்திற்கான
# உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும்
# தர அடைவும்

## 1.0 கேட்டல், பேச்சு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 1.1 செவிமடுத்தவற்றைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். | மாணவர்கள்:<br>1.1.5 செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்துக் கூறுவர். |
| 1.2 கேள்விகள் கேட்பர். | 1.2.6 காரண காரியங்களை அறியக் கேள்விகள் கேட்பர். |
| 1.3 திறம்படப் பேசுவர். | 1.3.10 சிக்கலுக்குத் தீர்வு காணப் பண்புடன் பேச்சுவார்த்தை நடத்துவர்.<br>1.3.11 சூழலை வருணனை செய்வர். |
| 1.4 விவரித்துக் கூறுவர். | 1.4.7 சிக்கலுக்கான காரண காரியங்களை விவரித்துக் கூறுவர். |
| 1.5 கருத்துரைப்பர்; முடிவு கூறுவர். | 1.5.5 வரைபடத்திலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர். |

**கேட்டல், பேச்சுக்கான தர அடைவு**

| தர அடைவு | |
|---|---|
| **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 1<br>மிகக் குறைவு | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்துக் கூறவும் சிக்கலுக்குத் தீர்வு காணப் பேச்சுவார்த்தை நடத்தவும் வருணனை செய்யவும் சிக்கலுக்கான காரண காரியங்களை விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். |
| 2<br>குறைவு | குறைந்த அளவிலும் தடுமாற்றத்துடனும் மட்டுமே செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்துக் கூறவும் சிக்கலுக்குத் தீர்வு காணப் பேச்சுவார்த்தை நடத்தவும் வருணனை செய்யவும் சிக்கலுக்கான காரண காரியங்களை விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். |
| 3<br>திருப்தி | ஓரளவு, செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்துக் கூறவும் சிக்கலுக்குத் தீர்வு காணப் பேச்சுவார்த்தை நடத்தவும் வருணனை செய்யவும் சிக்கலுக்கான காரண காரியங்களை விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். மேலும், ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறன் ஓரளவு உள்ளது. |
| 4<br>நன்று | நல்ல மொழிநடையில் சரளமாக, செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்துக் கூறவும் சிக்கலுக்குத் தீர்வு காணப் பேச்சுவார்த்தை நடத்தவும் வருணனை செய்யவும் சிக்கலுக்கான காரண காரியங்களை விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். ஆய்வுச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 5<br>சிறப்பு | நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றிச் சரளமாகவும் தயக்கமில்லாமலும் செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்துக் கூறவும் சிக்கலுக்குத் தீர்வு காணப் பேச்சுவார்த்தை நடத்தவும் வருணனை செய்யவும் சிக்கலுக்கான காரண காரியங்களை விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். ஆய்வு, ஆக்கச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 6<br>மிகச் சிறப்பு | நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றி ஏற்ற மொழியணியைப் பயன்படுத்திச் சரளமாகவும் தயக்கமில்லாமலும் கவரும் வகையிலும் செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்துக் கூறவும் சிக்கலுக்குத் தீர்வு காணப் பேச்சுவார்த்தை நடத்தவும் வருணனை செய்யவும் சிக்கலுக்கான காரண காரியங்களை விவரிக்கவும் தகவல்களையொட்டிக் கருத்துரைக்கவும் இயலும். ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |

## 2.0 வாசிப்பு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | மாணவர்கள்: |
| 2.1 சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர். | 2.1.10 அறிக்கையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.<br>2.1.11 நாடகப் படிவங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர். |
| 2.2 வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.2.8 வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களைப் பகுத்தாய்ந்து ஒரு முடிவுக்கு வருவர். |
| 2.3 கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர். | 2.3.13 குடும்பவியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.<br>2.3.14 இலக்கியம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.<br>2.3.15 வங்கியியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர். |

**வாசிப்புக்கான தர அடைவு**

| தர அடைவு | |
|---|---|
| **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 1<br>மிகக் குறைவு | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே வாசிப்புப் பகுதிகளை வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாயவும் முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| 2<br>குறைவு | குறைந்த அளவிலும் தடுமாற்றத்துடனும் மட்டுமே வாசிப்புப் பகுதிகளை வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாயவும் முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| 3<br>திருப்தி | ஓரளவு, வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாயவும் முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| 4<br>நன்று | வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்பச் சரளமாக வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாயவும் ஆய்வுச் சிந்தனையோடு ஏரணமான முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்குத் தெளிவாகப் பதிலளிக்கவும் இயலும். |
| 5<br>சிறப்பு | வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்பத் தயக்கமில்லாமல் சரளமாக வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாயவும் ஆய்வு, ஆக்கச் சிந்தனையோடு ஏரணமான முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்கு நல்ல மொழிநடையில் தெளிவாகப் பதிலளிக்கவும் இயலும். |
| 6<br>மிகச் சிறப்பு | வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்பத் தயக்கமில்லாமல் கவரும் வகையில் சரளமாக வாசிக்கவும் முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாயவும் ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு ஏரணமான முடிவை வெளிப்படுத்தவும் கருத்துணர் கேள்விகளுக்கு இலக்கணப்பிழையின்றி நல்ல மொழிநடையில் தெளிவாகப் பதிலளிக்கவும் இயலும். |

## 3.0 எழுத்து

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 3.3 தொகுத்து எழுதுவர். | மாணவர்கள்:<br>3.3.7 புள்ளிவிவரப் பட்டியலிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர். |
| 3.4 பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைப்பர். | 3.4.29 250 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.<br>3.4.30 250 சொற்களில் வாதக் கட்டுரை எழுதுவர்.<br>3.4.31 250 சொற்களில் விவாதக் கட்டுரை எழுதுவர்.<br>3.4.32 250 சொற்களில் வருணனைக் கட்டுரை எழுதுவர்.<br>3.4.33 250 சொற்களில் தலைப்பையொட்டி உரை எழுதுவர்.<br>3.4.34 250 சொற்களில் உரையாடல் எழுதுவர்.<br>3.4.35 250 சொற்களில் ஆண்டறிக்கை எழுதுவர்.<br>3.4.36 250 சொற்களில் கதை எழுதுவர். |

**எழுத்துக்கான தர அடைவு**

| தர அடைவு | |
|---|---|
| **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 1<br>மிகக் குறைவு | மிகக் குறைந்த அளவிலும் அதிக எழுத்துப்பிழையுடனும் மட்டுமே பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். |
| 2<br>குறைவு | குறைந்த அளவிலும் எழுத்துப்பிழையுடனும் மட்டுமே பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். |
| 3<br>திருப்தி | ஓரளவு, பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். மேலும், ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறன் ஓரளவு உள்ளது. |
| 4<br>நன்று | இலக்கணப்பிழையின்றி நல்ல மொழிநடையில் பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். மேலும், ஆய்வுச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 5<br>சிறப்பு | இலக்கணப்பிழையின்றியும் எழுத்துப்பிழையின்றியும் நல்ல மொழிநடையில் பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். மேலும், ஆய்வு, ஆக்கச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 6<br>மிகச் சிறப்பு | இலக்கணப்பிழையின்றியும் எழுத்துப்பிழையின்றியும் நல்ல மொழிநடையில் ஏற்ற மொழியணியைப் பயன்படுத்திக் கவரும் வகையில் பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைக்க இயலும். மேலும், ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு ஏரணமான வகையில் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |

## 4.0 செய்யுளும் மொழியணியும்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | மாணவர்கள்: |
| 4.2 திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.2.5 ஐந்தாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.3 பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.3.5 ஐந்தாம் படிவத்திற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.4 இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.4.5 ஐந்தாம் படிவத்திற்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.5 உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.5.5 ஐந்தாம் படிவத்திற்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.6 மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.6.5 ஐந்தாம் படிவத்திற்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.7 பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.7.5 ஐந்தாம் படிவத்திற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

**குறிப்பு:**

செய்யுள், மொழியணிக்கான கற்றல் தரங்களைப் பேச்சு, எழுத்துத் திறன்களின் வாயிலாக மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும், செய்யுள், மொழியணிக்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் தனிப் பாடவேளையிலேயே நடைபெற வேண்டும்.

## 5.0 இலக்கணம்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | மாணவர்கள்: |
| 5.1 எழுத்திலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.1.5 முற்றியலுகரம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.2 சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.2.7 தன்வினை, பிறவினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.3 புணர்ச்சி வகைகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.3.9 வடமொழிச் சந்தி இலக்கணத்தில் 'ஆ', 'ஏ', 'ஓ' தோன்றுதல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.4 வலிமிகும் இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.4.8 திரு, நடு, முழு, விழு, பொது, அணு போன்ற முற்றியலுகரச் சொற்களுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.5 வலிமிகா இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.5.10 பெயரெச்சத்தின்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.5.11 எழுவாய்த் தொடரிலும் விளித்தொடரிலும் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 5.7 தொடரியலை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.7.6 தொகாநிலைத்தொடரில் எழுவாய்த்தொடர், விளித்தொடர் ஆகியவற்றை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.7.7 தொகாநிலைத்தொடரில் வேற்றுமைத்தொடர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.7.8 தொகாநிலைத்தொடரில் வினையெச்சத்தொடர், பெயரெச்சத்தொடர் ஆகியவற்றை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.7.9 தொகாநிலைத்தொடரில் வினைமுற்றுத்தொடர், இடைசொற்றொடர் ஆகியவற்றை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.7.10 தொகாநிலைத்தொடரில் உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் ஆகியவற்றை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

**குறிப்பு:**

இலக்கணத்திற்கான கற்றல் தரங்களைப் பேச்சு, எழுத்துத் திறன்களின் வாயிலாக மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும், இலக்கணத்திற்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் தனிப் பாடவேளையிலேயே நடைபெற வேண்டும்.

# செய்யுளும் மொழியணியும்

## செய்யுள்

### அ. திருக்குறள்

1. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
   கெடுநீரார் காமக் கலன். (605)

2. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
   மேற்சென்று இடித்தற் பொருட்டு. (784)

3. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
   என்ன பயத்ததோ சால்பு. (987)

### ஆ. பல்வகைச் செய்யுள்

**1. கம்ப இராமாயணம் (இயற்கை இன்பம்)**

குயிலினம் வதுவை செய்ய,
கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும்
அரங்கினுக்கு அழகு செய்ய,
பயில்சிறை அரச அன்னம்
பன்மலர் பள்ளி நின்றும்
துயிலெழ, தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை.

**2. புறநானூறு (பெரியோர் சிறியோர்)**

யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னா தென்றலும் இலமே; 'மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம்' என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

**3. தொல்காப்பியம் (உயிர்களின் பகுப்பும் சிறப்பும் மரபும்)**

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

## மொழியணி

### அ. இணைமொழி

1. சீராட்டிப் பாராட்டி
2. விருப்பு வெறுப்பு
3. சண்டை சச்சரவு
4. தயவு தாட்சணியம்
5. ஆதி அந்தம்

### ஆ. உவமைத்தொடர்

1. விழலுக்கு இறைத்த நீர் போல
2. கொழு கொம்பற்ற கொடி போல
3. சிறகு இழந்த பறவை போல
4. மாலுமி இல்லாத கப்பல் போல
5. நீறு பூத்த நெருப்புப் போல

### இ. மரபுத்தொடர்

1. வெள்ளிடைமலை
2. இனிப்புக் காட்டுதல்
3. ஒத்துப் பாடுதல்
4. நெளிவு சுளிவு
5. ஓய்வு ஒழிச்சல்

### ஈ. பழமொழி

1. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்.
2. தர்மம் தலை காக்கும்.
3. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்.
4. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
5. தன் உயிரைப்போல் மன்னுயிரையும் நினை.
6. துணை போனாலும் பிணை போகாதே.
7. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
8. மனக்கவலை பலக் குறைவு.
9. சைகை அறியாதவன் சற்றும் அறியான்.
10. கெடுவான் கேடு நினைப்பான்.

# இலக்கணம்

**அ. எழுத்திலக்கணம்**

1. முற்றியலுகரம்

**ஆ. சொல்லிலக்கணம்**

1. தன்வினை, பிறவினை

**இ. புணர்ச்சி வகைகள்**

1. வடமொழிச் சந்தி இலக்கணம் (வழக்குச் சொற்களுக்கு மட்டும்)
   - நிலைமொழி ஈற்றில் 'அ/ஆ' + 'அ/ஆ' = 'ஆ' தோன்றுதல்
   - நிலைமொழி ஈற்றில் 'அ/ஆ' + 'இ/ஈ' = 'ஏ' தோன்றுதல்
   - நிலைமொழி ஈற்றில் 'அ/ஆ' + 'உ/ஊ' = 'ஓ' தோன்றுதல்

**ஈ. வலிமிகும் இடங்கள்**

1. திரு, நடு, முழு, விழு, பொது, அணு போன்ற முற்றியலுகரச் சொற்களுக்குப்பின்

**உ. வலிமிகா இடங்கள்**

1. பெயரெச்சத்தின்பின்
2. எழுவாய்த் தொடரிலும் விளித்தொடரிலும்

**ஊ. தொடரியல்**

1. தொகாநிலைத்தொடர்
   - எழுவாய்த்தொடர்
   - விளித்தொடர்
   - வேற்றுமைத்தொடர்
   - வினையெச்சத்தொடர்
   - பெயரெச்சத்தொடர்
   - வினைமுற்றுத்தொடர்
   - இடைச்சொற்றொடர்
   - உரிச்சொற்றொடர்
   - அடுக்குத்தொடர்

## PANEL PENGGUBAL

| | | |
|---|---|---|
| 1. | Ramanathan A/L Nagarathinam | Bahagian Pembangunan Kurikulum |
| 2. | Usharani A/P Arumugam | Bahagian Pembangunan Kurikulum |
| 3. | Vanaja A/P Ratnam | Bahagian Pembangunan Kurikulum |
| 4. | Haridass A/L Kandaswamy | Bahagian Pembangunan Kurikulum |
| 5. | Prof. Madya Dr. Samikkanu Jabamoney A/L Ishak Samuel | Universiti Pendidikan Sultan Idris |
| 6. | Vijayan A/L Ramasamy | Jabatan Pendidikan Negeri Johor |
| 7. | Thamil Selvan A/L Perinan | Jabatan Pendidikan Negeri Kedah |
| 8. | Saravanan A/L Ramachindran | Jabatan Pendidikan Negeri Pahang |
| 9. | Sagundala A/P Arokiam | Jabatan Pendidikan Negeri Pulau Pinang |
| 10. | Sathianarayanan A/L Krishna Iyer | Jabatan Pendidikan Negeri Sembilan |
| 11. | Sivalingam A/L P Seenivasan | Jabatan Pendidikan Wilayah Persekutuan Kuala Lumpur |
| 12. | K. Gunasekaran A/L M. Kandasamy | IPG Kampus Raja Melewar, Negeri Sembilan |
| 13. | Rajam A/P Suppiah | IPG Kampus Raja Melewar, Negeri Sembilan |
| 14. | Saminathan A/L Govindasamy | IPG Kampus Tuanku Bainun, Pulau Pinang |
| 15. | Vasugi A/P Kolanthai | SMK Bandar Utama, Petaling Jaya, Selangor |
| 16. | Thrupawai A/P Narayanasamy | SMK Kajang Utama, Kajang, Selangor |
| 17. | Vijaya Letchumy A/P Pachayappan | SMK Raja Abdullah, Kepong, W. P. Kuala Lumpur |
| 18. | Manokaran A/L Rengasamy | SMK Raja Lumu, Pelabuhan Klang, Selangor |
| 19. | Thilagavathi A/P Vayyapuri | SMK Saujana Utama, Sungai Buluh, Selangor |
| 20. | Bamah A/P Subramaniam | SMK Seri Serdang, Seri Kembangan, Selangor |

| | | |
|---|---|---|
| 21. | Kalaivani A/P Kuppusamy | SMK Shahbandaraya, Klang, Selangor |
| 22. | Chitra A/P Krishnan | SMK St. Paul, Seremban, Negeri Sembilan |
| 23. | Mail Vahanam A/L Arumugan | SMK Sungai Pelek, Sungai Pelek, Selangor |
| 24. | Usharani A/P Ramasamy | SMK Tinggi Port Dickson, Port Dickson, Negeri Sembilan |

## TURUT MENYUMBANG

| | | |
|---|---|---|
| 1. | Mannar Mannan A/L Maruthai | Universiti Malaya |
| 2. | Prof. Madya Dr. Sababathy A/L Venugopal | Universiti Malaya |
| 3. | Supramani A/L Shoniah | Universiti Malaya |
| 4. | Dr. Paramasivam A/L Muthusamy | Universiti Putra Malaysia |
| 5. | Anantha Kumarl A/L A. Vellasamy | Jabatan Pendidikan Negeri Melaka |
| 6. | Poobalan A/L Manickam | Jabatan Pendidikan Negeri Pahang |
| 7. | Kunaseelan A/L Subramaniam | IPG Kampus Ipoh, Perak |
| 8. | Narayanasamy A/L Kuppusamy | IPG Kampus Raja Melewar, Negeri Sembilan |
| 9. | Paneer Selvan A/L Anthony | IPG Kampus Sultan Abdul Halim, Kedah |
| 10. | Vengadammal A/P Rajoo | IPG Kampus Tuanku Bainun, Pulau Pinang |

**PENGHARGAAN**

**Penasihat**

| | | |
|---|---|---|
| Dr. Mohamed bin Abu Bakar | - | Timbalan Pengarah |
| Datin Dr. Ng Soo Boon | - | Timbalan Pengarah (STEM) |

**Penasihat Editorial**

| | | |
|---|---|---|
| Mohamed Zaki bin Abd. Ghani | - | Ketua Sektor |
| Haji Naza Idris bin Saadon | - | Ketua Sektor |
| Mahyudin bin Ahmad | - | Ketua Sektor |
| Dr. Rusilawati binti Othman | - | Ketua Sektor |
| Mohd Faudzan bin Hamzah | - | Ketua Sektor |
| Fazlinah binti Said | - | Ketua Sektor |
| Mohamed Salim bin Taufix Rashidi | - | Ketua Sektor |
| Haji Sofian Azmi bin Tajul Arus | - | Ketua Sektor |
| Paizah binti Zakaria | - | Ketua Sektor |
| Hajah Norashikin binti Hashim | - | Ketua Sektor |

**Penyelaras Teknikal Penerbitan dan Spesifikasi**

Saripah Faridah binti Syed Khalid
Mior Syazril bin Mohamed Sapawi

**Pereka Grafik**

Siti Zulikha binti Zelkepli

ISBN 978-967-420-479-2

**Bahagian Pembangunan Kurikulum**
**Kementerian Pendidikan Malaysia**
Aras 4-8 Blok E9, Kompleks Kerajaan Parcel E,
62604 Putrajaya.
Tel: 03-8884 2000 Fax: 03-8888 9917
http://bpk.moe.gov.my